CSE

அரசு பாலிடெக்னிக் கல்லூரி,
கோவை–641 014.

குறிப்பாணை எண். 1589/இ1/2025 நாள்: 09.07.2025

பொருள் : அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கோவை – கல்வி உதவித்தொகை 2025–2026 ஆம் கல்வியாண்டு SC, ST ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் – தொடர்பாக.

*****

இப்பயிலகத்தில் நடப்புக் கல்வியாண்டில் ( 2025–2026 ) முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு கல்வி பயிலும் ஆதி–திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு புதிய விண்ணப்பங்களை www.gptccbe.co.in என்ற கல்லூரி இணைதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டு அதனைப் விடுதல்கள் ஏதுமின்றி பூர்த்தி செய்து வரும் 31.08.2025–ம் நாளுக்குள் தவறாமல் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

**விண்ணபத்துடன் மாணவியர்/மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. முதல் பட்டதாரியாக இருந்தால் அதற்கான சான்று (வட்டாட்சியர்)
2. தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தனியர் கணக்கு துவங்கியதற்கான வங்கிக் கணக்கு புத்தகம்(Bank Pass BooK)
3. வருமான சான்று அசல் (Income certificate) நடப்பாண்டிற்கு
4. ஆதார் அட்டை நகல்
5. இதற்கு முன்னர் பயின்ற பள்ளி மதிப்பெண்சான்று (நகல்)
6. ஆதார் எண் மொபைல் எண்ணுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்
7. ஆதார் எண் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்
8. ஜாதிச் சான்றிதழ் ( இணைய வழியாக பெறப்பட்ட ஜாதிச் சான்று மட்டுமே ஏற்கப்படும் )

**மேலும் முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு பதிவு செய்யும் மாணவர்கள் கட்டாயமாக NSP –Portal –ல் (OTR–ONE TIME REGISTRATION ) பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

(ஒம்) பூ.தேன்மொழி
முதல்வர்

முதல்வருக்காக 9/7/25
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
கோவை- 641 014.

பெறுநர்

1. அனைத்துத் துறைத் தலைவர்கள்

   ( தங்கள் துறை மாணவ/ மாணவியர்கள் மேற்கண்ட நாளுக்குள் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து அலுவலகத்திற்கு அனுப்பி பயன் பெற ஏதுவாக மாணவர்களுக்கு அறிவுறுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.)
2. அனைத்து துறை ஒருங்கிணைப்பாளர்கள்

   (அனைத்து துறை ஒருங்கிணைப்பாளர்கள் தத்தம் துறைச் சார்ந்த மாணவர்களை மேற்படி NSP–Portal–ல் அவர்களது விவரங்களை (OTR) செய்துள்ளனரா என்பதை உறுதிபடுத்திய பின்னர் அதன் விவரங்களை நோடல் அலுவலருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.)

நகல் : அறிவிப்புப் பலகை

நகல் : கல்லூரி இணையதளம்

நகல் : நோடல் அலுவலர், கல்வி உதவித் தொகை (SC/ST)